**ஆரச்சிகட்டுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 02 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 11 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபையிடமிருந்த சொனி மைக்ரோ கஸட் 01 உள்ளடங்கலாக உதிரிப்பாகங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 07 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 19,791,649 தொகையான பட்டோலையின் படி உரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,374,173 தொகையானமையால் ரூபா 397,476 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதியொன்று காணப்பட்டது.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 42,303,514 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 39,671,085 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 4,030,064 தொகை மூன்று ஆண்டுகள் கடந்திருந்த நிலுவை ஆதன வரித் தொகையும் காணப்பட்டது. தீர்க்கப்பட வேண்டியிருந்த கடன்கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 10,101,156 ஆகக் காணப்பட்டது.

**1.3.5 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 3,400,922 ஆகக் காணப்பட்டதுடன் 5 ஆண்டுகள் கடந்து அறவிடப்பட உள்ள மீதிகளின் பெறுமதி ரூபா 143,460 ஆகக் காணப்பட்டது. அம் மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வு கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,920,753 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,548,161 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (அ) | வீதவரியும் வரியும் | 2,932 | 1,946 | 8,291 |
| (ஆ) | வாடகை | 2,319 | 3,101 | 4,804 |
| (இ) | வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் | 925 | 947 | - |
| (ஈ) | ஏனைய வருமானம் | 27,713 | 16,409 | 25,697 |

**2.2.2 நிலுவையான வீத வரி**

சபைக்குரித்தான வாராந்தச் சந்தை மற்றும் ஏனைய ஆதனங்களிலிருந்து நீண்டகாலமாக ரூபா 4,966,890 தொகையான அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்டதுடன் நிலுவைப் பணம் அறவிடப்படுவது தொடர்பில் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நிலுவையான கடை வாடகை**

சபைக்குரித்தான கட்டிடங்களை வாடகைக்கு வழங்குவதன மூலம் மீளாய்வாண்டிற்காக ரூபா 399,990 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 2,013,250 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 11,102,330 |

**2.2.5 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டின் பாதீட்டின் படி வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடும் 1300 வியாபார நிலையங்கள் இனங்காணப்பட்ட போதிலும் 833 வியாபார நிலையங்களிலிருந்து மாத்திரம் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. 467 வியாபார நிலையங்களில் அனுமதிப்பத்திரம் அறவிடப்படுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 மிகைக்கட்டணம்**

(அ) ஆரச்சிகட்டுவ வாராந்த சந்தைக் கட்டணத்தைச் சேகரிக்கும் உரிமை 2005 ஆம் ஆண்டிற்காக வாடகைக்கிடப்பட்டமைக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 901,705 தொகையான வாடகைப் பணத்தை அறவிடப்படாமை தொடர்பாக சபைத் தலைவர் உட்பட உத்தியோகத்தர்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 2011 மார்ச் 24 ஆம் திகதி மிகைக்கட்டண அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அத் தொகையின் தவணை அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 113,100 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 788,605 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) சபையால் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு தாமதமாகச் செலுத்தப்பட்டதன் காரணமாக விதிக்கப்பட்டிருந்த ரூபா 8,468 தொகையான மிகைக்கட்டணம் சபையால் அந் நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அத் தொகை எதிர்காலத்தில் மிகைஅறவீடு செய்யப்பட இருந்தது.

(இ) சபையால் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு தாமதமாகச் செலுத்தப்பட்டதன் காரணமாக விதிக்கப்பட்டிருந்த ரூபா 5,599 தொகையான மிகைக்கட்டணம் விதிக்கப்பட்டிருந்ததுடன் இம் மிகைக்கட்டணம் சபையால் எதிர்காலத்தில் செலுத்தப்படுவதற்கிருந்தது.

**3.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ஆரச்சிகட்டுவ சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு 70 பட்டோலைப் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்

விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் இப் பற்றுச்சீட்டுக்கள் எதுவும் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமானச் சேகரிப்பிற்காக பயன்படுத்தப்பட்ட பிரதேச சபை 01 பட்டோலைப் பற்றுச்சீட்டுத் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு மிகவும் நலிவான நிலையில் நிலவுவதாகவும் மூன்று உத்தியோகத்தர்களால் ஒரே தடவையில் 07 புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் களத்திலும் அலுவலகத்திலும் சேகரிக்கப்பட்ட வருமானம் முறைப்படி கணக்கீடு செய்யப்பட்டிருந்ததாகவும் உறுதிப்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,195,210 உழவு இயந்திரங்களும் 07 உதிரிப்பாகங்களும் ரூபா 125,680 பெறுமதியான 04 இயந்திர உபகரணங்களும் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.3 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்

மதிப்பீட்டு செலவினம் ரூபா 2,685,570 தொகையான ஆனவிலுந்தாவ மீன் சந்தை நிர்மாணிப்பிற்காக 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 1,618,954 தொகையான செலவினத்தை ஏற்றிருந்த போதிலும் நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்படாதிருந்த காரணத்தால் இது வரை பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்து முகாமைத்துவம்